## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| 2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 08–ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **சக்திவேல்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**08.01.2026** **OS.24/2023** **வா.சா.1 சக்திவேல்**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:

1) எனது மகன் தமிழ்வானனுக்கு பவர் ஏஜென்ட் என்ற அடிப்படையில் நான் இவ்வழக்கை நடத்தி அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனது மகன் தமிழ்வானன் இதே பிரதிவாதி ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்த விவரமும் அதில் எனது மகன் தாக்கல் செய்த ஆவணங்களின் விவரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது மகன் தமிழ்வானனுக்கு எனது தகப்பனார் எந்த சொத்தைப் பொறுத்து செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் புல எண்.39/9 விஸ்தீரனம் 61 சென்ட் புஞ்சை நிலமாகும்.

2) செட்டில்மென்ட் எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியம் என்பதைக் காட்ட ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் எனது தகப்பனார் 1971 ம் ஆண்டு அனுமந்த நாயக்கரிடமிருந்து கிரயம் வாங்கிய வகையில் பாத்தியமுடையதாகும். எனது தகப்பனார் அனுமந்த நாயக்கரிடமிருந்து தாவா சொத்தை கிரயம் வாங்கிய கிரயப் பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நாங்கள் மேற்படி ஆவணத்தை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3) எனது தகப்பனார் கிரையம் வாங்கிய பத்திரத்தை பார்த்தால் தாவா சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியமுடையது என்பது தெரியவரும் என்றால் சரிதான். 1971 ம் ஆண்டில் எனது தகப்பனார் தாவா சொத்தை கிரையம் எதுவும் வாங்கவில்லை என்றாலும் அந்த கிரையப் பத்திரம் எதுவும்

R VENKADESH PRASANTH Digitally signed by R VENKADESH PRASANTH Date: 2026.01.08 16:16:43 +0530

எங்கள் வசம் இல்லை என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் தாவா சொத்தை அனுபவம் செய்து வந்ததை காட்ட ஏதேனும் அனுபவச் சான்று என் வசம் உள்ளதா என்றால் உள்ளது சொத்தின் பட்டா, வரி ரசீதுகள் உள்ளது.

4) மேற்படி ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். எனது மகன் தமிழ்வானன் பெயரில் தாவா சொத்திற்கு பட்டா உள்ளதா என்றால் பட்டா உள்ளது. எனது மகன் பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். தாவா சொத்து சம்பந்தமாக இந்த நம்பர் பிரதிவாதி மற்றும் சூரன் ஆகியோர் மீது மானாமதுரை டி.மு. கோர்டில் அ.வ.எண்.46/2016 என்ற நம்பரில் எனது மகன் வழக்கு தொடுத்தார் என்றால் இந்த நம்பர் பிரதிவாதி காந்திமதி மீது வழக்கு தொடுத்தார் சூரன் மீது வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை.

5) மேற்படி மானாமதுரை டி.மு.கோர்டில் தாக்கல் செய்த வழக்கானது சமூகம் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அ.வ.எண். 57/2019 என்ற நம்பராகி நடைபெற்று வந்தது என்றால் சரிதான். மேற்படி வழக்கு எனது மகன் ஆஜராகாத காரணத்தால் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் தள்ளுபடியான வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து நடத்தி வருகிறோம். நான் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து நடத்தி வருவதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

6) மேற்படி தள்ளுபடியான அ.வ.எண்.57/2019 வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க நடவடிக்கை எதுவும் எடுக்காமல் தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வ.சா.ஆ.1 தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரிதான். இந்த நம்பர் பிரதிவாதி காந்தியம்மாள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது அத்தை மகள் ஆவார். இந்த நம்பர் பிரதிவாதி காந்தியம்மாளை எனது சித்தப்பா திருமணம் செய்து பின்னீடு அவர்களுக்குள் விவாகரத்து ஆகிவிட்டது என்றால் சரிதான்.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.01.08 16:16:52 +0530

7) பிரதிவாதி காந்தியம்மாள் என்னுடைய அத்தை மகள் என்பதையோ எனது சித்தப்பாவின் மனைவி என்பதையோ பிராதில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு தாவா சொத்து எந்த காலத்திலும் பாத்தியமுடையதாக இருந்ததில்லை என்றாலும் பாத்தியமில்லாத சொத்தை எனது தகப்பனார் எனது மகனுக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை அனுபவத்தை விட்டுக்கொடுத்து இந்த நம்பர் பிரதிவாதி எழுத்துமூலமாக எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல எழுதிக்கொடுத்துள்ளார். தாவா சொத்தில் எங்களுக்கு எந்தவித அனுபவமும் இல்லை என்றாலும் நாங்கள் கேட்டுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**( பிரதிவாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.01.08 16:17:01 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam